# வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
# WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE
Girraween Public School, 9 Bando Road Girraween NSW 2145

## ஆண்டு 7 - பேச்சுப் போட்டி

**போட்டி நடைபெறும் திகதி: 12.05.2018 (5.00 pm)**

---

**நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.**

## தாய் மொழியே வாய்மொழியாம்.

நாம் தமிழர். நமது தாய் மொழி தமிழ். ஒரு குழந்தை பிறந்தவுடன் முதலில் கேட்பது தாயின் மொழியைத் தான். அதுவே அக்குழந்தையின் வாய்மொழியாக மாறுவது உலக வழமை. ஆனால் இது புலம்பெயர் நாடுகளில் சாத்தியமாகின்றதா? உலகில் பலர் தம் தாய் மொழியில் பேசத் தயங்குவது இல்லை. ஆனால், தமிழர்களாகிய நாம் மட்டும் ஏனோ தமிழில் பேசத் தயங்குகிறோம்.

ஒரு மொழி மக்களால் தொடர்ந்து பேசப்படாது போனால், அது மறைந்துவிடும். உதாரணமாக இலத்தீன், சமஸ்கிருதம் போன்ற மொழிகள் இன்று பேச்சு வழக்கில் இல்லை. ஆனால் எமது மொழி தொடர்ந்து பலரால் பேசப்பட்டு வருவதாலும், செழுமையான இலக்கண, இலக்கியங்களைக் கொண்டிருப்பதனாலும் “செம்மொழி” என்ற உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுள்ளது.

அவுஸ்திரேலிய போன்ற நாடுகளில் முதன் மொழியான ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரிவது நமது வாழ்க்கைக்கு அவசியமானதுதான். ஆனால் தாய்மொழியை புறக்கணித்துவிட்டு ஆங்கிலத்தில் மட்டுமே பேசிக் கொண்டிருப்பது, எமது சொந்தத் தாயை அவமதிப்பது போன்றதாகும். தமிழரோடு தமிழில் கதைப்பது தான் சிறப்பு என்பதை நாம் ஒருநாளும் மறக்கக் கூடாது.

உலகம் எங்கும் பரந்து வாழும் தமிழர்கள் அனைவரும் தமிழைக் கற்று, தமிழில் பேசினால், தமிழன்னையின் புகழைச் சொல்லவும் வேண்டுமா? நாம் பேசும் மொழிதான் எமக்கொரு தனித்துவமான அடையாளத்தைத் தரும். பேசப்படும் வாய்மொழிதான் பல்லாண்டுகள் வாழும். இதை உணர்ந்து தமிழர்களாகிய நாம், எமது தாய்மொழி வாழத், தமிழில் பேசுவோம்.

தமிழில் பேசுவோம், தமிழராய் வாழ்வோம்.

நன்றி, வணக்கம்.